

தயாரிப்பாளர் சங்க நிர்வாகிகள் கூட்டத்தில்...

**''நா**ங்கள் உயர்த்தி கேட்ட சம்பளத்தைப் பெறும் வரை ஓய மாட்டோம்'' என பெப்ஸி தரப்பு பரப ரப்பு அறிக்கைத் தர, 'எங்களுக்கும் பெப்ஸி தொழி லாளர்களும் எந்த ஒப்பந்தமும் கிடையாது. விருப் பப்பட்டவர்களை வைத்து படப்பிடிப்பை நடத்திக் கொள்வோம்' என சூடு கிளப்பியது தமிழ் திரைப் படத் தயாரிப்பாளர் சங்கம். விளைவு நித்தம் நித் தம் சங்க கூட்டம், குடும்பத்துடன் உண்ணாவிரதம். அதைத் தொடர்ந்து படப்பிடிப்பு நிறுத்தம்.

30 ஆயிரம் திரைப்படத் தொழிலாளர்களைக் கொண்டது நம் தமிழ் சினிமா உலகம். ஒலிப்பதி வாளர்கள், ஒளிப்பதிவாளர்கள், இயக்குநர்கள், சண்டை பயிற்சியாளர்கள், தயாரிப்பு நிர்வாகிகள், டப்பிங் கலைஞர்கள் என 24 தொழில் பிரிவுகளில் இவர்கள் வருகிறார்கள்.

இவர்களுக்கு மூன்றாண்டுகளுக்கு ஒரு முறை சம் பளம் உயர்த்தித் தரப்படுவது வழக்கம். இதைத் தயா ரிப்பாளர் சங்க நிர்வாகிகளும், பெப்ஸி அமைப்பின் நிர்வாகிகளும் கலந்து பேசி ஒப்பந்தத்தின் மூலம் முடிப்பார்கள். இந்த ஒப்பந்த முடிவு கடந்த ஆண்டு ஜனவரி மாதம் 14-ம் தேதியோடு முடிவுக்கு வந்தது. 9-வது சம் பள ஒப்பந்தம் பற்றி பேச்சு எழு கையில், சட்டப் பேரவை தேர் தல் வரவே, பேச்சுவார்த்தையில் பெரிய முட்டுக்கட்டை விழுந்தது.

இதையடுத்து தமிழகத்தில் ஏற் பட்ட ஆட்சி மாற்றம் திரையுலகி லும் காட்சிகளை மாற்றிப் போட் டன.

தயாரிப்பாளர்கள் சங்க நிர்வா கிகளாக இருந்த இராம.நாராய ணன், சிவசக்தி பாண்டியன் உள் ளிட்டோர் ராஜிநாமா செய்ய, தொடர்ச்சியாக பெப்ஸி அமைப்பி லும் மாற்றங்கள். பெப்ஸி அமைப் பின் தலைவராக இருந்த வி.சி.குக நாதன் தன் பதவியை ராஜிநாமா செய்யவே, யாரை வைத்து பேச்சுவார்த்தையைத் தொடங்குவது என இரு தரப்பிலும் குழப்பங்கள்.

இருந்தாலும், வி.சி.குகநாதன் தலைமையிலான பொறுப்பாளர்களே தொடர்ந்து பேச்சுவார்த்தை யில் ஈடுபட்டனர். ஆட்சியின் மேல் மட்ட அதிகா ரத்தின் வரம்புக்குள் இருந்த இயக்குநர் எஸ்.ஏ.சந் திரசேகரன், கேயார் உள்ளிட்டோர் தயாரிப்பாளர் கள் சங்கத்தின் சார்பில் பேச்சுவார்த்தையில் கலந்து கொண்டனர்.

இருந்தும், முறையாக நியமிக்கப்படாத தயாரிப் பாளர் சங்க நிர்வாகிகளால் பேச்சுவார்த்தையில் பயன் இல்லாமல் போனது.

இந்த நிலையில்தான், பெப்ஸியின் தற்காலிகத் தலைவர் பொறுப்பேற்ற ராமதுரை, சம்பளத்தைத் தடாலடியாக உயர்த்தி அறிவித்தார். திகைத்துப் போன தயாரிப்பாளர் சங்க நிர்வாகிகள் ஃபிலிம் சேம்பரில் அவசரக் கூட்டத்துக்கு ஏற்பாடு செய்த னர்.

''சினிமா தியேட்டரில் சின்ன படங்களுக்கு டிக் கெட்டை கம்மியா விக்கணும். என்னோட படத் துக்கு எத்தனை தொழிலாளர் வேணும்ன்னு நான்தான் முடிவு செய்வேன். பெப்ஸிக்கு அந்த அதிகாரம் கிடையாது'' எனத் தன் பாணியில் பேச்சை தொடங்கினார் டி.ராஜேந்தர்.



டி.ராஜேந்தர்

''பெப்ஸியின் சம்பள உயர் வைப் பார்த்து அவசரப்பட்டு எந்த முடிவும் எடுக்கக் கூடாது. நிறைய படங்கள் முக்கால்வாசி முடிந்த நிலையில் இருக்கின்றன. அந்தப் படங்கள் எல்லாம் கடுமையாக பாதிக்கப்படும். வட்டிக்குப் பணம் வாங்கின தயாரிப்பாளர்களுக் குப் பெரிய பிரச்னை உருவாகி விடும்'' என உண்மை நிலையை விளக்கி பேசினார் இயக்குநர் சுந் தர்.சி.